அக்கரைப்பற்று மாநகர சபை
அம்பாறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று மாநகரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுகளின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ஒரு உத்தியோகத்தருக்கு வெளிநாட்டுப் பயணத்திற்காக முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 175,712 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 24,063 கடன் மீதியை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு 2014 ஏப்பிரல் 22 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் வனங்கள் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் 2008 ஜனவரி 25 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 1553/16 (II) ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ''அ''பகுதி | மாநகரசபைக்கு உட்பட்ட மடுவங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ)இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி. 571(2) | வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 7,336,860 மொத்த பெறுமதியான 102 வைப்புக்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1646 | நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் குறித்த மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 27 வாகனங்களுக்குரிய 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டுகளுக்கான ஓட்டப்பதி வேடுகள் 2014 ஏப்பிரல் 20 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கிழக்கு மாகாண சபையின் நிதி ஒழுங்கு விதி இல. 477.2 | 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் பற்றாக்குறையான 12 அலுவலக உபகாரணங்கள் மற்றும் 05 பொறித் தொகுதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

2 நிதிமீளாய்வு

----------------------

2.1 நிதிவிளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 12,545,325ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 670,522 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 13,215,847 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

------------------------------------------

2.2.1 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 வரை கிடைக்கவேண்டிய ரூபா 843,950 தொகையான நீதிமன்ற தண்டப்ணத்தினை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 17,91,537 தெகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனைய வருமானம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 02 விளம்பரப் பதாதைகளுக்காகவும் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 04 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிடவேண்டிய அண்ணளவாக ரூபா 125,000 தொகையான வருமானத்தை சபை இழக்கவேண்டி ஏற்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டுமுதல் 2012 ஆம் ஆண்டுவரையான காலத்திற்கான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா 3,159,412 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு 2014 ஏப்பிரல் 22 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதிவரை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரி ரூபா 696,669 தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு 2014 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை மாநகர சபையின் பொது நூலகத்தினால் வாசகர்களுக்கு இரவல் வழங்கிய ரூபா 6,601 பெறுமதியான 52 புத்தகங்களை அவர்களிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேர்தல் கடமைகள் தொடர்பாக ஊழியர்களுக்கு சபையின் நிதியிலிருந்து வழங்கப்பட்ட கொடுப்பனவு ரூபா 1,412 தேர்தல்கள் திணைக்களத்திடமிருந்து மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு காலப்பகுதியில் செலுத்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவு ரூபா 193,502 தொகைக்கு பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கிகொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமானமுகாமைத்துவம்
(இ) நிலையானசொத்துக் கட்டுப்பாடு